# மூவாசையையால் நாம் பெறுவது இன்பமா ? அல்லது துன்பமா ?



சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
**94449 58526.** Email:- thiruppalli@yahoo.com
www.pambanswamigal.org or pambanswamigal.net

நெல்லுடன் உமி ஒட்டிக் கொண்டு இருப்பது போல நாம் பிறக்கும் போதே நம்முடன் ஆசையும் கூடவே வந்து விடுகின்றது. ஆசை என்பது ஒரு பொருள் மீது நாம் கொண்டு இருக்கும் பற்று ஆகும். ஒரு பொருள் மீது நாம் ஆசை வைத்துவிடுமோமென்றால் அதை அடைவதற்கு எத்தனை வழிகள் இருக்கின்றதோ அத்தனை வழிகளையும் நாம் கையாள்வது நம்முடைய பழக்கமாகும். ஆசை என்பது மனிதனுக்கு மிகவும் அவசியம். ஆனால் அது பேராசையாக மாறும் போதுதான் துன்பம் நம்மை மிகவும் வாட்டுகின்றது. இந்த உலகத்தில் மனிதர்களின் ஆசைகள் பலவாயினும், முக்கியமாக மூன்று ஆசைகளை குறிப்பிடுவர்கள் நம் முன்னோர்கள். அவை முறையே மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசையாகும். சரி இதனால் நாம் பெறுவது இன்பமா ? அல்லது துன்பமா ?

***<u>இன்பம் அடைகின்றோமா அல்லது துன்பம் அடைகின்றோமா என்பதை ஆய்வு செய்வோம்:–</u>***

மண்:–

நாம் இந்த பூமியில் வாழ்வதற்கு இம் மூன்றும் அவசியமே. இம்மூன்று நமக்கு எவ்வளவு வேண்டும் என்பது புரிந்துகொண்டால் என்றும் இன்பமே. இதன் அளவு கோல் என்ன ? என்பது நமது அடுத்த வினா. ஒருவருக்கு **5** சென்ட் நிலம் இருந்தால் அதில் அவருடைய பொருளை வைத்து அவருக்கு ஏற்றவாறு அந்த நிலத்தை பயன்படுத்தி தன்னுடைய வாழ்வாதாரத்தை சுகமாக வைத்து இருக்கலாம். ஒருவருக்கு **500** சென்ட் நிலம் இருந்தால் அவருக்கு தேவையான நிலத்தை பயன்படுத்தி தன்னுடைய வாழ்வாதாரத்தை சுகமாக வைத்து இருக்கலாம். மீதி நிலங்களை சமூக நலத்திற்கும், அந்த ஊரின் முன்னேற்றத்திற்கும் வழங்கி அந்த ஊரை சிறப்புறச் செய்யலாம். உதாரணமாக அந்த ஊரில் தான் வணங்குகின்ற தெய்வத்திற்கு ஒரு கோயில் கட்டலாம், அந்த கோயிலை நிர்வகிக்க சில சென்ட் நிலங்களை தானமாக வழங்கலாம். அல்லது அந்த கோயிலுக்கு குளம் எடுக்க நிலத்தைக் கொடுக்கலாம். பாடசாலைகள் அமைக்க கொடுக்கலாம். இவ்வாறு தெய்வகாரியங்களுக்கு தன்னிடம் அதிகமாக இருக்கும் நிலத்தை பயன்படுத்தும் போது அந்த கொடை வள்ளலுடைய பெயர் அந்த இடங்களுக்கு வழங்கப்பட்டு வருவதை நாம் இப்போது கேள்விப்படுகின்றோம். இன்றும் நம் தமிழகத்தில் பல புராதன கோயில் பல ஜமீன்தார்கள் மற்றும் பல மன்னர்களால் கட்டப்பட்டு அவர்களின் பெயர்களில் அந்த ஊரும் அமைந்திருக்கின்றது. இதனால் அந்த ஊர்களில் நீர் ஆதாராம், மண்ணின் வளம் பெருகி அந்த பகுதியில் உள்ள மக்களுக்கு மட்டும் பயன்படாமல் மற்ற பகுதியில் உள்ள மக்களும் பயன் அடைகின்றனர். நம் நாட்டை ஆண்ட அசோக மாமன்னர் செய்த பல அரிய பெரிய காரியங்களால் அவருடைய சின்னம் நம் தேசிய கொடியில் அசோக சக்கரமாக உள்ளது. இதுவே நமக்கு மிகப் பெரிய சான்றாகும்.

**pdfMachine**
**Is a pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!

பெண்:–

பெண் என்பவள் போற்றப்பட வேண்டியவள். உயிர் இனங்கள் தோன்றுவதற்கு அவள் தன்னையே தியாகம் செய்கின்றாள். ஒரு இல்லத்தில் பெண் படித்துவிட்டால் அந்த குடும்பம் ஒரு பல்கலைக் கழகமாக மாறும். ஒரு ஆண் மகன் ஒரு பெண்னை திருமணம் செய்து கொள்ளலாம். இதை உலகம் ஏற்றுக் கொள்ளும். ஆனால் ஒரு சில ஆண்கள் அந்த பெண்னை கொடுமைப்படுத்தி தன்னுடைய பேராசையை நிறைவேற்றும் வகையில் நடந்து கொண்டால் அந்த செயல் அவனை மிகப் பெரிய அதலபாதாளத்தில் தள்ளிவிடும். இராவணனைவிட சிறந்த சிவபக்தர் இல்லை. ஆனால் அவன் கொண்ட பேராசையால் தன் நாட்டையே இழந்தான். சிலப்பதிகாராத்தில் கோவலன் தான் கொண்ட பேராசையால் அனைத்தையும் இழந்து, கடைசியில் தன் உயிரையும் இழந்தான். அது போல் சில ஆண்கள் தான் கொண்ட பேராசையால் குடும்பத்தில் நிம்மதியை இழந்து வாடுவதை நாம் இன்று கண்கூடாக பார்க்கின்றோம். வள்ளல்பெருமான் தெய்வமணி மாலையில் கூறும் போது கூட “மருவு பெண் ஆசையை மறக்கவே வேண்டும்” என்று கூறியுள்ளார். இதன் உட் பொருள் தன் மனைவி மீது ஆசையை வைக்க கூடாது என்பது அல்ல. மற்ற பெண்கள் மீது இச்சை கொள்ளும் பேராசை கூடாது என்பதாகும்.

பொருள் (பொன்) :–

பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லை என்பது தெய்வப் புலவர் வாக்கு ஆனால் அடுத்த வரியில் அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை என்று கூறியதை நாம் மறந்துவிட முடியாது. நாம் இந்த உலகத்தில் வாழ்வதற்கு பொன் என்று சொல்லக்கூடிய பணம் நமக்கு அவசியம். நம்மைப் படைத்த இறைவன் நமக்கு என்ன தரவேண்டும், என்ன தரக்கூடாது என்று கணக்கு போட்டு நம்மை இங்கே பிறக்கச் செய்கின்றான். நாம் நினைத்தது நடக்கவில்லை என்றால் இறைவன் நமக்கு மிகப் பெரிய அருள் செய்து இருக்கின்றான் என்பது தான் உள் அர்த்தம். நமது பேராசையால் தவங்கள் பல செய்து இறைவனிடம் நாம் வரம் வாங்கி நாம் நினைக்கின்ற காரியத்தை செய்கின்றோம். ஆனால் அதன் முடிவு நம்மை அதே துன்பத்தில் சென்று வீழ்த்திவிடுகின்றது. தசரத மகாராஜன் தனக்குப் பிள்ளை வரம் வேண்டி யாகங்கள் பல செய்தும், நான்கு பெண்களை திருமணம் செய்து கொண்டு அரசாட்சி செய்தான். தசரத மகாராஜனுக்கு 4 ஆண் குழந்தைகள் பிறந்தன, வளர்ந்தன. ஒரு கால கட்டத்தில் இராமபிரான் காட்டுக்கு செல்ல வேண்டும் என்ற நிலை வந்தவுடன் அதை மனம் பொருக்க முடியாமல் தசரத மகாராஜான் இறந்தான். மாவீரன் அலெக்சாண்டர் பொருளாசை என்னும் பேராசை வந்தவுடன் தனக்கு அருகில் இருந்த நாட்டை எல்லாம் போராடி பெற்றான். ஆனால் அவன் இறக்கும் போது தன்னுடைய இரண்டு கைகளையும் வெளியில் நீட்டியபடி தன்னுடைய உடலை எடுத்துச் செல்லும்படி கூறினான். இதில் இருந்து அவன் கூறியது “நான் இந்த உலகத்தில் இருந்து எதுவும் எடுத்துச் செல்லவில்லை” என்ற ஒரு சின்னமாக இவ்வாறு செய்யச் சொன்னான்.

ஞானியர்களின் கருத்து என்ன ?

பண்டைக் காலத்தில் மன்னர்கள் பலர் மண்ணாசையால் எத்தனை, எத்தனை போர்கள் நிகழ்த்தியுள்ளனர். அம்மன்னர்கள் மண்ணோடு மண்ணாகப் போயினர். அருள்வழி நின்று ஆலயப் பணிகள் செய்த அரசர்கள் சிலரே இன்றும் புகழுடம்புடன் வாழ்கின்றனர். இந்த வழியில் வந்த மாமன்னர் தஞ்சைப் பெரிய கோவிலை அமைத்து ஆன்மீக வழி நின்ற இராஜராஜ சோழ மன்னன் ஆவார். மண்ணாசையால் குலத்தோடு மாண்டவன் துரியோதனன்.

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் நான்காம் மண்டலத்தில் 19வது ஞானவாக்கியமாக “ பொன் மண்ணாசை மண் ஆகும்” என்கின்றார். பொன்னாசையும், மண்ணாசையும் உன் உடம்பைப் போல மண்ணாகி அழிந்து போகும், எனவே அவற்றின் மீதுள்ள பேராசையை நீக்க அறிவுறுத்துகின்றார்.

pdfMachine
Is a pdf writer that produces quality PDF files with ease!
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!

“ மட்பூமி மிக்குடையோர் மண்ணிலுள்ள தீவினையை
மட்பூமி கொண்டோ மறுப்பார் பரஞ்சுடரே” என்றும்

“மாட கூடங்களுளோர் மண்ணகன்று போகுங்கால்
மாட வடங்கள் வரமோ பரஞ்சுடரே” என்று கூறுவதை நாம் நினைவு கொள்ள வேண்டும்.

பொன்னாலும், பொருளாலும் வரும் துன்பத்தை உணர்வோர் அதன் மீதுள்ள பேராசையை அறுத்தல் வேண்டும்.

“ஈட்டலும் துன்பம் மற்று ஈட்டிய ஒண் பொருளைக்
காத்தலும் ஆங்கே கடும் துன்பம் – காத்தல்
குறைபடில் துன்பம் கெடில் துன்பம் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்” – நாலடியார் செய்யுள்

இதன் பொருள், பொருளைச் சம்பாதித்தல் துன்பம். அதனைக் காத்தல் துன்பம், குறைந்தால் மனத்துன்பம். இழந்து விட்டாலோ மிகுந்த மனத்துன்பம். சிலர் விரக்தியுற்று உயிரைக்கூட விட்டுவிடுகின்றனர்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் “பகலில் பொருள் தேடி உழைப்பதால் இளைப்பு உண்டாகின்றது. தேடிய பொருளைத் திருடர்கள் அபகரித்து விடுவார்களோ என்ற அச்சத்தால் இரவில் நித்திரை இன்மை உண்டாகின்றது. செல்வரைச் சதா சுற்றி நிற்கும் ஈனர்கள், மூடர்களோடு சேர்ந்து பழிதொழில் புரியப் பண்ணும்” என்று பணம் என்ற பதிகத்தில் பரைசாற்றுகின்றார்.

## இன்பமே பெற நாம் என்ன செய்யவேண்டும்:–

நம்மிடம் உள்ள மூவாசைகளையும் அதாவது பொருளையும், மண்ணையும், குடும்ப உறுப்பினர்கள் (கணவன் மற்றும் மனைவி) தெய்வ காரியங்களுக்கு அவற்றை பயன்படுத்திக் கொண்டால் என்றும் இன்பமே. 63 நாயன்மார்களும், தன்னிடம் உள்ள பொருளையும், மண்ணையும், தாங்களும், சிவனடியார்களுக்கு பயன் படும் வகையில் நடந்துக் கொண்டதால் இறைவனே அவர்களை தன்னுடன் அழைத்துச் சென்றான். அதாவது உமா தேவியுடன் தானும் அந்த அடியார்களுக்கு காட்சி கொடுத்து அவர்களை ஆட்கொண்டான் என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மையாகும். ஆகையால் நாமும் சண்முக கவசம் மாத இதழ் நடத்துகின்ற இந்த அடியார்களுக்கு இறைவனின் பெருமையை பரைசாற்றக் கூடிய இவ்வகையான இதழ்களுக்கு பக்க பலமாக பொன்னும் பொருளும் கொடுத்து என்றும் நாம் இன்பம் அடைவோமாக!

**pdfMachine**
**Is a pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!